{සියලුම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது / All Rights Reserved / සියලුම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது }

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித்திணைக்களம்- வடமத்திய மாகாணம்
**Department of Education – North Central Province**

| தரம் - | 10 | இரண்டாம் தவணை பரீட்சை - 2025 | நேரம் :2 மணி 10 நிமிடம் |
|---|---|---|---|

பாடம் :- இஸ்லாம்

பாடசாலைப் பெயர் :- ..........

சுட்டெண் :- ..........

## புள்ளித் திட்டம்

### இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 2 | **11** | 3 | **21** | 3 | **31** | 3 |
| **02** | 4 | **12** | 3 | **22** | 1 | **32** | 1 |
| **03** | 2 | **13** | 3 | **23** | 2 | **33** | 4 |
| **04** | 1 | **14** | 4 | **24** | 4 | **34** | 1 |
| **05** | 3 | **15** | 3 | **25** | 1 | **35** | 1 |
| **06** | 1 | **16** | 2 | **26** | 3 | **36** | 1 |
| **07** | 2 | **17** | 1 | **27** | 4 | **37** | 3 |
| **08** | 3 | **18** | 2 | **28** | 4 | **38** | 4 |
| **09** | 3 | **19** | 3 | **29** | 1 | **39** | 3 |
| **10** | 1 | **20** | 2 | **30** | 3 | **40** | 2 |

## இஸ்லாம் II

**(01)**

1) கடல் நீர், குளத்து நீர், ஆற்று நீர் *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

2) ஆண் பெண் உடலுறவு கொள்ளல், விந்து வெளிப்படல், ஹைழ், நிபாஸ் ஏற்பட்டு நின்றுவிடல், புதிதாக இஸ்லாத்தில் நுழைதல், மரணமடைதல். *(இவற்றுள் ஏதேனும் இரண்டு)*

3) குலக் ஹஸன், அக்லாக் ஹஸனா, மகாரிமுல் அக்லாக், அதப், ஆதாப் *(போன்ற ஏதேனும் இரண்டு)*

4) தயம்மும் செய்தல், காலுறைகள் மீது மஸ்ஹு வெய்தல்

5) ஸலாம் கூறுதல், பர்ளான தொழுகையின் முன் பின் சுன்னத்துகள், ஸதகா *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

6) கிழக்கு - பாரசீக வலைகுடா, மேற்கு - செங்கடல்

7) தாயிப், மதீனா (யஸ்ரிப்)

8) அல்லாஹ்வின் அன்பு கிடைக்கும், தயாள சிந்தனை உண்டாகும், செல்வம் விருத்தியடையும், பிறரது அன்பு கிடைக்கும். *(இவை போன்ற பொருத்தமான இரு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

9) இறுதி அத்தஹிய்யாத்தின் பின்னர்

10) அல்அமீன், அஸ்ஸாதிக்

(2x10 =20 புள்ளிகள்)

**(02)**

i. பர்ளு ஐன் - ஐங்காலத் தொழுகை, ரமழான் மாத நோன்பு
பர்ளு கிபாயா - ஜனாஸா ரொதழுகை, ஊரில் ஒரு வைத்தியரை உருவாக்குதல் *(போன்ற ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

ii. இஸ்லாத்திலிருந்து தூரமாக்கப்டுவார், மன நிம்மதியை இழப்பார், பாவச் செயல்களில் வீழ்ந்துவிடுவார், மறுமையில் ஸகர் எனும் நரகில் நுழைவார். *(இது போன்ற வேறு பொருத்தமான மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)*

iii. தூய எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாது இருத்தல், ஷரீஆவின் அனுமதி, ஷரீஅத்தின் வரையறைகளை மீறதிருத்தல், நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. பணிவாக நடத்தல், இரவில் நீண்ட நேரம் நின்று வணங்குதல், நடுநிலையாக செலவு செய்தல், இணைவைத்தலை தவிர்த்தல், விபச்சாரம், பொய் சாட்சி கூறல் ஆகியவற்றைத் தவிர்த்தல். *(இன்னும் பார்க்க பாட நூல் : பக்கம் 47) (அவற்றிலிருந்து ஏதேனும் பொருத்தமான இரண்டு)*

ii. அல்குர்ஆன், சுன்னாவைப் பின்பற்றி வாழல், முகஸ்துதி, பெருமை, பொறாமை போன்ற இழிகுணங்களைத் தவிர்த்தல், பர்ளான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றல், அல்குர்ஆனை அதிகம் ஓததல் *(இது போன்ற வேறு பொருத்தமான மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்)*

*iii. பெற்றோருக்கு உபகாரம் செய்தல், அவர்களுக்கு பிரார்த்தனை செய்தல் பற்றிய அல்குர்ஆன் அல்லது சுன்னா ஆதாரமொன்றைக் குறிப்பிட்டு அதன் அடிப்படையில் சுருக்கமாக அதன் அவசியம் பற்றி விளக்கியிருத்தல் வேண்டும்.*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. அஸ்ல், பர்உ, ஹுக்ம், இல்லத்

ii. இஜ்மாஉஸ் ஸரீஹ் : "தெளிவான இஜ்மாஉ" என இதனை அழைக்கலாம். குறிப்பிட்ட காலத்தில் வாழும் அனைத்து முஜ்தஹிதுகளும் ஏகோபித்த முடிவில் உள்ளனர் என்பது அவர்களது வார்த்தைகளின் மூலம் தெளிவாகத் தெரிய வந்திருப்பின் அதனையே இவ்வாறு அழைப்பர். இது இஜ்மாஉல் கவ்லி என்றும் அழைக்கப்படுகின்றது.

இஜ்மாஉல் அக்ஸரிய்யா : பெரும்பான்மையின் முடிவைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. குறித்த ஒரு பிரச்சினையின்போது முஜ்தஹிக்களில் கணிசமானோர் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதையே இது குறிக்கும்.

இம்மாஉஸ் ஸுகூதி : மௌனம் சார்ந்த இஜ்மாஉ என இதனை அழைக்கலாம், குறிப்பிட்ட காலத்தில் வாழும் முஜ்தஹிதுகளில் ஒருவரோ, சிலரோ குறிப்பிட்ட பிரச்சினைக்கான முடிவு சம்பந்தமாகத் தமது இணக்கத்தையோ, முரண்பாட்டையோ. சாதித்திருப்பின் அம்முடிவை இவ்வாறு அழைப்பர்.

iii. நபி (ஸல்) அவர்களின் நற்பதாவது வயதில் இறங்க ஆரம்பமாகிய அல்குர்ஆன் 23 வருடங்கள் இறங்கியது. அவை அத்தியாயம், வசனம் என சந்தர்பத்திற்கு ஏற்ப இறங்கியது. அவ்வாறு இறங்கிய ஒழுங்கு தர்தீபுன் நுஸுல் என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு நோன்பிலும் அல்குர்ஆனை ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஓதிக்காட்டி மீள ஒழுங்குபடுத்துவார்கள். அவ்வொழுங்கு தர்தீபுத் திலாவத் என அழக்கப்பட்டது. *(போன்ற விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. *ஸுன்னாவின் முக்கியத்துவம் பற்றிய பொருத்தமான அல்குர்ஆன் வசனம் ஒன்று எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும். (பார்க்க: பாடநூல் - தரம் 10, பக்கம் 77)*

ii. ஹதீஸ், நபிமார்கள் கண்ட உண்மைக் கனவுகள், நபி மூஸா (இலை) அவர்கள் தூர்ஸினா மலையடியில் அசரீரி வடிவில் அல்லாவுடன் பேசியது, ஸகரிய்யா (அலை) அவர்கள் சமிக்ஞைகள் மூலம் அல்லாஹ்வைத் தொழுவும் புகழவும் கற்றுத்தந்தமை. *(ஏதேனும் மூன்று)*

iii. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் ஆர்மீனியா, ஆஸர்பைஜான் பிரதேசங்களில் முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர். படையணியில் ஈராக்கியரும், ஷாம் தேசத்தவரும் இருந்தனர். அவர்கள் அல்குர்ஆனை ஓதும்போது வெவ்வேறான முறைகளில் ஓதினர். மட்டுமன்றி தாம் ஓதும் முறையே சரியானது என வாதித்தனர். இதனை ஹுதைபா அல்யமானி (ரழி) அவதானித்தார்கள். போர் முடிந்து மதீனா சென்றதும் அல்குர்ஆனின் பெயரால் முஸ்லிம்கள் பிளவுபடக் கூடாது என்ற கருத்தை முன்வைத்து போர்க்களத்தில் நிகழ்ந்ததைக் கலீபாவிடம் எடுத்துக் கூறினார்கள். தையா அல்யமானி (ரழி) அவர்களின் முறைப்பாட்டைச் ழ்த்திய கலீபா, உடனடியாக செயல்பட ஆரம்பித்தார். ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்களின் தலைமையில் குறைஷியரை உள்ளடக்கிய ஒரு குழுவைஅமைத்தார். அவர்களிடம் குறைஷியருடைய வழக்கு மொழியில் அல்குர்ஆனைப் பிரதி பண்ணுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் அபூபக்ர் (ரழி) அவர்கள் கால முஸ்ஹபையும், குறைஷிகளின் மொழி வழக்கையும் கருத்தில் கொணடு மீட்டுப் பிரதிகளைத் தயாரித்தார்கள். அவை ஒவ்வொரு மாகாணத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. அந்தப் பிரதிகளோடு குறைஷியரின் வழக்கு மொழியில் ஓதக்கூடும் கணிகளையும் அனுப்பி வைத்தார். இனிமேல் அந்தக் காரிகள் போன்றே ஓத வேண்டும் என்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பிரதியைப் பார்த்தே எழுதிக்கொள் வேண்டுமென்றும் (முன்னர் வைத்திருந்த) ஏனைய பிரதிகள் அனைத்தையும் எரித்துவிட வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார். இதனால் எல்லோரும் அல்குர்ஆனை ஓர் முறையில் ஓதும் நிலை ஏற்பட்டது. எனவேதான் உஸ்மான் (ரழி) அவர்கள் ஜாமிஉல் குர்ஆன்" என அழைக்கப்படுகின்றார். அவரது கால குர்ஆன் முஸ்ஹப் உஸ்மானி எனப்படுகின்றது.

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. வியாபாரம், கால்நடை வளர்ப்பு

ii. விருந்தோம்பல், மொழிப்புலமை, சுதந்திரவேட்கை, வாக்குமீறாமை *(போன்ற ஏதேனும் மூன்று)*

iii. சிலை வணக்கம் பரவிக் காணப்பட்டமை, அல்லாஹ்வை ரப்பு என மாத்திரமே ஏற்றிருந்தமை, சிலை வணக்கத்தைத் தவிர்ந்து வாழ்ந்தோர் ஹனீப்கள் என அழைக்கப்பட்டமை. யூத, கிறிஸ்தவர்கள், மஜூஸிகள் காணப்பட்டமை போன்ற விடையங்களை விளக்கியிருத்தல் வேண்டும்.

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 24-28ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 19-23ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 53-54ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 66-67ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)